

## ஆசிரியர் மடல்

# இயேசுவே மெய்யான ஒளி

**அன்பான வாசகர்களுக்கு , இறை மக்களுக்கு ,**

இரட்சகரும் மீட்பரும் வரப்போகிற இராஜாதி இராஜாவுமாயிருக்கிற **இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.**

பத்தாம் மாதத்தில் நுழைந்து விட்டோம்.ஆதியாகமம் 8: 5 சொல்லுகிறது பத்தாம் மாதம் மட்டும் ஜலம் வடிந்து கொண்டே வந்தது.இந்த ஒன்பது மாதமளவும் எத்தனையோ விதமான இடுக்கண்கள்,பாதைகள்,நெளிவு,சுளிவுகள் ,உபத்திரவங்கள்,அனுபவங்கள் ஊடாய் கடந்து வந்தோம்.அநேக பாரங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் வடிந்து வடிந்து பத்தாம் மாதம் முதல் தேதியிலே மலைச் சிகரங்கள் காணப்பட்டன.அதாவது பேழையிலிருந்த நோவாவுக்கு மலைச் சிகரங்கள் தென்பட்டது. நம்பிக்கை பிறந்தது.ஆம், நமக்கும் நம்முடைய அநேக பாரங்கள் வடிந்து,வடிந்து இந்த மாதத்தில் நம்பிக்கை சிகரங்கள் தென்படச் செய்வார்.துளிர்க்காத காரியங்களை துளிர்க்கச் செய்வார்.என்னவாகுமோ! எப்படியாகுமோ! என்று பயந்து கொண்டிருந்த நினைவுகள் தண்ணீரில் தத்தளித்த பேழைபோல் இருந்ததல்லவா! பேழை மலைச் சிகரங்களில் வந்து தங்கிற்று என்று விசுவாசிப்போம்.ஆம், நம்முடைய கால்களும் இந்த பத்தாம் மாதம் பத்திரமாய் தரை இறங்க கர்த்தர் உதவி செய்திருக்கிறார் இன்னும் அநேகம் தொடர்ந்து செய்வார் என்ற நம்பிக்கையோடு நம் ஓட்டத்தை தொடருவோம்.

**"தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார்.அவர்கள் தடைகளை நீக்கி வாசலால் உட்பிரவேசித்து கடந்து போவார்கள்.அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாக போவார்.கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்து போவார்"** (மீகா 2 :13).ஆம்,இந்த மாதம் காரியங்களை வாய்க்கச் செய்வார். வரும் காலங்களை பிரகாசிக்கச் செய்வார்.அவருடைய சமூகம்,பிரசன்னம் நமக்கு ஆறுதலாய் இருக்கும்படி செய்வார். நாம் வேண்டிக் கொள்வதற்கும் நினைப்பதற்கும் அதிகமாய் தேவன் நம்முடைய வழிகளில்,பாதைகளில் செயல்படுவார்.நம்முடைய கண்கள் அதிசயங்களை காணும்.

கடந்த மாதங்களில் திருவண்ணாமலை மாவட்டம் எங்கள் கிளை சபையை சுற்றியுள்ள பகுதிகளில் கிராம ஊழியம் செய்தோம்.தொடர்ந்து **திருவள்ளூர் மாவட்டம் ரெட்ஹில்ஸ், பாகல்மேடு, பழவேற்காடு** பகுதிகளில் கிராம ஊழியம் செய்ய கர்த்தர் உதவி செய்தார்.கன்னடப்பாளையம் சபையில் வெளியரங்க நற்செய்தி ஊழியம் இரண்டு நாட்கள் நடந்தது.**சகோ. ஜான்சன்,சகோ.ஜோசப் கரிகாலன்** வந்திருந்தார்கள்.திருவண்ணாமலை கோனையூர் ஆலயம் கட்டப்பட்டுக்கொண்டிருகிறது.

**கத்தோலிக்க மிஷினரி இயக்கம் காரைக்கால் எல்லாம் இயேசுவுக்கே** திருச்சபையில் **(பாஸ்டர் வின்சென்ட் லூர்து )** கடந்த மாதம் மூன்று நாட்கள் கருத்தரங்காக நடத்தப்பட்டது. கத்தோலிக்கர் மத்தியில் ஒருஅசைவுண்டாக வேண்டும்.பட்டி மன்றம் தேவனுடைய சபை பெருக வேண்டியது கிருபையிலா? கிரியையிலா? தலைப்பில் **சகோ.அல்பா ஆசைத்தம்பி** (ஆவடி) தலைமையில் சிறப்பாக நடந்தது.திருவள்ளூர் பாஸ்டர் தங்கச்சன் கதீட்ரலில் கிறிஸ்தவ ஐக்கிய

நல வாரியத்தின் 7- ம் ஆண்டு கடந்த செப்டம்பர் 15 - ம் தேதி வெகு சிறப்பாக தலைமை நீதிபதி,சட்டமன்ற உறுப்பினர்கள்,ஆயர் முன்னிலையில் நடந்து முடிந்தது.கிறிஸ்தவ மக்களுக்கு இன்றைய அவசியம் தேவை **நலவாரியம்.** வெகுவாய் முயற்சித்து வருகிறோம்.விபரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

**நெகேமியா**(ஆலயப் பணி) இரண்டாம் கட்ட *(Second Stage)* பணிகள் ஆரம்பித்து விட்டோம். *(See Pictures)* நின்று யோசித்தால் முற்றிலும் இயலாத காரியம்தான்.ஆரம்பித்துவிட்டால் தேவன் யோசிக்க ஆரம்பிப்பார்.யோர்தான் புரண்டு வருவதை என் நினைவுக்குள் கொண்டு வந்தார். அருகில்கூட போக முடியாத ஒரு பெருவெள்ளம்.ஆனால் ஆசாரியர் களை அதில் நிற்கச்சொல் என்று தலைவன் யோசுவாவிடம் கர்த்தர் பேசுகிறார்.வெறுமையாக இல்லை. உடன்படிக்கை பெட்டியை சுமந்துகொண்டு நிற்கச் சொல்லுகிறார்.ஆசாரியர்கள் சொன்னதை நிறைவேற்ற துணிந்தார்கள்.சுமந்தார்கள்.யோர்தானிலே கால்கள் பட்டவுடன் பெருவெள்ளம் குவியலாக நின்றது. ஆம்,**நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையை காண்பீர்கள்** (யோ 11 : 40).உடன்படிக்கை பெட்டிதான் ஆசாரியர்களாகிய ஊழியர், ஸ்தாபனத் தலைவர், விசுவாசிகளின் **விசுவாசம்** . இதை எடுத்துக் கொண்டு எங்கே வேண்டுமென்றாலும் நிற்கலாம்.லட்சோப லட்சம் ஜனங்கள் கடந்து போகுமட்டும் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்கள் யோர்தானின் நடுவிலே சுமந்து கொண்டு நின்றார்கள்(யோசுவா 3 : 17 )எத்தனை மணிநேரம் எத்தனை நாட்கள் தெரியாது **.காலமும் நியாமும் கர்த்தரின் கரத்தில் உண்டு** ( பிர 8: 6) .

இது பாரத்தை சுமக்கும் காலம் .அழிந்துபோகும் ஆத்துமாக்களை சுமக்கும் காலம்.இரக்கத்தை சுமக்கும் காலம் . நீதியை சுமக்கும் காலம் . கர்த்தருக்காக இழப்பை சுமக்கும் காலம். சுமப்போமா ? ஆலயத் தின் பாரத்தை சுமக்க முன் வாருங்கள்.அது நம்மை பரத்திற்கு சுமந்து செல்லும்.

**"உங்கள் தேவனாகிய கர்த்தர், சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை நாங்கள் கடந்து தீருமட்டும் எங்களுக்கு முன்பாக வற்றிப் போகப் பண்ணினது போல, உங்கள் தேவனாகிய கர்த்தர் யோர்தானின் தண்ணீருக்கும் செய்து, அதை உங்களுக்கு முன்பாக நீங்கள் கடந்து தீருமளவும் வற்றிப் போகப் பண்ணினார் என்று அறிவிக்கக் கடவீர்கள்"**( யோசுவா 4 : 24). சிவந்த சமுத்திரத்தின் தேவன்தான் யோர்தானுக்கும் தேவனாயிருந்தார்.அதுபோல நெகேமியாவின் முதல் கட்டத்திற்கு *(First Stage)* தேவன்தான் எங்களுடைய இரண்டாம் கட்டத்திற்கும் *(Second Stage)* தேவனாயிருப்பார் என்ற விசுவாசத்தோடு ஆரம்பிக்கிறோம்.

எங்கள் மெய்யான ஒளி குடும்பத்திலே ஒரு குடும்பத்திற்கு ரூ . 10,000 /= என்று நியத்திருக்கி றோம் . கொடுத்து வருகிறார்கள்.தங்கள் திராணிக்கு மேலேயும் சிலர் கொடுக்கிறார்கள். இந்த குடும்பத்திலே இணைந்து கொள்ள இருகரம் நீட்டி உங்களையும் அழைக்கிறோம்.அநேகர் ஒன்று சேர்ந்தால் இந்த ஆண்டிலேயே பணிகளை முடித்துவிடலாம் .இந்த பூமியிலே நம்முடைய பயணம் முடியும் முன்பாக அநீதியான உலகப்பொருளால் நமக்கு சிநேகிதரை சம்பாதித்துக் கொள்ளுவோம்,**நாம் மாளும்போது நம்மை நித்தியமான வீடுகளிலே அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்** (லூக்கா 16 : 9) **ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து ஊக்கமாய் ஜெபிப்போம் .**

**கிறிஸ்துவின் மகிமையான இறைப் பணியில்**

**பாஸ்டர் S. போஸ்கோ .**

**நீங்கள் அனுப்பும் கட்டிடப் பணி காணிக்கைகளுக்கு 80 G வரி விலக்கு உண்டு.**


**& 9283443230 (True Light Ministries)**

**Bank Transfer :**

**S.Bosco, State Bank Of India (SBI) A / C. No : 20003657678. Avadi .**

**Our Website : www.truelightministry.org**

***17, O.P. Raman Street, Gandhi Nagar, Avadi, Chennai - 600 054 .***




# கிறிஸ்துவின் சபை

**"அந்த பேழையிலே சிலராகிய எட்டுபேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்.**

**அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" (1 பேதுரு 3 : 20,21).**

பேழையாகிய கிறிஸ்துவுக்குள் பிரவேசிப்பதுதான் இரட்சிப்பு (விடுதலை) தேவகட்டளையின்படி கட்டப்பட்ட பேழைக்குள் நோவாவும் அவன் குடும்பத்தார் எட்டு பேரும் பிரவேசித்து காக்கப்பட்டனர். அழிவு அவர்களை அணுகவில்லை. இயேசுவின் இரத்தத்தால் சம்பாதிக்கப்பட்ட சபைக்குள் இருப்பவர்களுக்கு பாதுகாப்பு உண்டு. அங்கே இரட்சிப்பு முழுமையாக உண்டு. சத்தியம் நிறைந்த சபை ஐக்கியம் ஒருவனில் இரட்சிப்பு நிறைவேற வழிவகுக்கிறது. இரட்சிக்கப்பட்டோம் என்று சொல்லி நடப்பதல்ல. "**அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள் என்று வேதம் நமக்கு சுட்டிக்காட்டுகிறது**" (பிலிப் 2 :12). ஆகவேதான் அப்போஸ்தலர் 2 : 47 சொல்லுகிறது, **இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்.**

இந்த கடைசி நாட்களில் சபை ஐக்கியம் என்பது தவிர்க்கப்பட முடியாத ஒன்று . அது எப்படிப்பட்ட சபையாக இருக்க வேண்டும்? எபேசியர் 5 சொல்லுகிறது **கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து தாம் அதைத் அதை திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும் கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்.** (எபே 5 : 25,27).

***Main Line Churches*** என்று சொல்லிக் கொள்ளுவதுண்டு.தவறு சொல்லவில்லை. இங்கே எபேசியர் சொல்லுகிற சபை ***Main Fuse Churches*** . இந்த ***Fuse Carrier*** தான் இணைக்கவும், மின்சாரத்தை கடத்துவதுமாயிருக்கிறது. நம்மை கிறிஸ்துவோடு கூட சரியாய் இணைக்கவும், ஆவியின் நடத்துதலினாலும், நிறைவினாலும் இந்த மண்ணானவனுடைய சாயலை வானவருடைய சாயலாய் மாற்றுகிறது. நாம் வானத்துக்குரியவர்களாய் மாற வேண்டும் என்பதற்காகவே தம் சபையை, தம் சுயஇரத்தத்தை சிந்தி தோற்றுவித்தார். இயேசு கிறிஸ்துவின்

**இயேசுவின் இரத்தத்தால் சம்பாதிக்கப்பட்ட சபைக்குள் இருப்பவர்களுக்கு பாதுகாப்பு உண்டு. அங்கே இரட்சிப்ப முழுமையாக உண்டு. சத்தியம் நிறைந்த சபை ஐக்கியம் ஒருவனில் இரட்சிப்பு நிறைவேற வழிவகுக்கிறது.**

இரத்தத்திற்கு சமீபமாய் வருகிறவர்கள் அதோடு நின்று விடுவதல்ல. மாறாக இரத்தினாலே தோற்றுவிக்கப்பட்ட சபைக்குள் காணப்பவது மிகவும் அவசியம். ஏனெனில் அது **கிறிஸ்துவின் சரீரமாகிய சபை** (எபே 5). நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?வெறுமனே சரீரத்தோடு சுற்றித்திரிந்து நடந்து கொண்டிருக்கிறீர்களோ? இல்லை சரீரமாகிய சபைக்குள் காணப்படுகிறீர்களா? பேழை என்பது கிறிஸ்துவுக்கும் சபைக்கும் நிழலாட்டமாய் இருப்பதால், இந்த செய்தியிலே பேழையை மையமாக வைத்து சில காரியங்களை தியானிப்போம்.



## 1.கீழ்ப்படிதல்

**“நோவா அப்படியே செய்தான். தேவன் தனக்கு கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்”** (ஆதி 6 : 22). இந்த வசனத்திலே அவருடைய கீழ்படிதலின் மேன்மை வெளிப்படுகிறது.

தேவன் எதைச் சொன்னாரோ அதைத்தான் செய்தான். அப்படியே செய்தான். தன் சொந்த கருத்துக்களை சொல்ல வில்லை. மாறுபாடான கருத்துக்களையும் புகுத்தவில்லை. செய்து முடிக்கும்வரை(செய்து முடித்தான்) கீழ்ப்படிந்தான். சொல்லாததை செய்யவில்லை. சொன்னதைத்தான் செய்தான். ஏதோ ஒரு வேகத்தில் ஆரம்பித்து விட்டு அதை பாதியில் விட்டு விடாதபடி, ஆரம்ப உற்சாகத்தோடே அதை இறுதிவரை நின்று செய்து முடித்தான்.

**எந்த ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதன் முடிவு நல்லது** (பிரசங்கி 7 :8). அநேகருடைய ஆரம்பம் நன்றாக இருக்கும். ஆனால் முடிவு நிறைவற்றதாய், குறைவுள்ளதாய், வேதனையாய் இருக்கிறது. காரணம் என்ன? ஏறக்குறைய *450 × 75 × 45* அடி பேழையை ஒரு தனி மனிதன் உண்டாக்குவது அத்தனை எளிதல்ல. அது மிகவும் கடினமானது. ஆனாலும் செய்து முடித்தான். அநேக இடையூறுகள், இயலாமை, இல்லாமை, நிந்தை, பரிகாசங்கள் அநேகம் அவனை சந்தித்திருக்கும்.ஆனாலும் செய்து முடித்தான். பேழையை செய்யும் வேளையிலே சில கடினமான வேளைகளில்கூட கர்த்தருடைய ஆலோசனையைத்தான் முன் வைத்து அதன் படி செய்தானேயொழிய, தன் சொந்த நிபந்தனையையோ, சுயமாய் எடுத்த ஆலோசனையையோ உள்ளே புகுத்த முயற்சிக்கவில்லை.ஆகவே அவன் செய்து முடித்தான். நம்மில் அநேகரின் ஓட்டம் சரியாய் முடிக்கக் கூடாதபடி ஒரு தொய்வு உண்டாவதற்கும் முக்கிய காரணம், நம்முடைய அறிவையும் நமக்குள் தோன்றும் ஆலோசனையையும் முன்வைப்பதுதான். ஆவியின் சிந்தையை கொஞ்சம் தள்ளிவைத்து விட்டு மாம்ச சிந்தையை உள்ளே புகுத்துவது தான் தோல்விகளுக்கும், இழப்புகளுக்கும், நஷ்டங்களுக்கும் ஒரு பிரதான காரணம்.இந்த மனுஷீக திட்டங்களையும், மாம்ச சிந்தை

**தோல்விகளுக்கும் , இழப்புகளுக்கும், நஷ்டங்களுக்கும் ஒரு பிரதான கார ணம். இந்த மனுஷீக திட்டங்களையும், மாம்ச சிந்தையையும் விலக்குவோம். தேவஆலோசனையின் படி கீழ்ப்படிந்த அந்த அனுபவமே நோவாவுக்கு பேழையை வெற்றியாய்செய்து முடிக்க வழிவகுத்தது.**


யையும் விலக்குவோம். தேவ ஆலோசனை யின்படி கீழ்ப்படிந்த அந்த அனுபவமே நோவாவுக்கு பேழையை வெற்றியாய் செய்து முடிக்க வழிவகுத்தது.

பவுலுடைய கூற்று என்ன? ஓட்டத்தை முடித்தேன் என்றல்லவா! கிறிஸ்துவுக்குள் வாழ அழைக்கப்பட்ட நாம் ஒவ்வொருவரும் சொல்ல வேண்டிய ஒரு வார்த்தைதான் இது. இதை பவுல் ஒரு நிச்சயத்தோடும் தைரியமாக எழுதுவதற்கு காரணம் , அவன் அழைக்கப் பட்டபோது தேவனிடத்தில் அவன் கேட்ட முதல் கேள்வி **ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்?** என்றுதான். தேவனுடைய ஆலோசனைக்கும் அவரு டைய சித்தத்திற்கும் முழுமையாய் கீழ்ப்படி வதுதான் நம்முடைய ஓட்டத்தை கிறிஸ்துவுக் குள் ஓடி முடிக்க வைக்குமேயொழிய, மற்ற தெல்லாம் ஓட்டத்தில் ஓட்டையைத்தான் பெற்றுத்தரும். கோட்டையை விட்டுவிடு வோம். **அந்த பரலோக கோட்டையை எட்டி பிடிப்பதற்கான ஒரு பாலம், அல்லது ஏணிதான் சபை.**

ஜலப்பிரளயம் நாற்பதுநாள் பூமியின் மேல் உண்டானபோது,ஜலம் பெருகி, பேழையை கிளம்பப்பண்ணிற்று.அது பூமிக்கு மேல் மிதந்தது(ஆதி 6:17).பேழைக்கு பூமியோடு இருந்த இணைப்பு (தொடர்பு) நாற்பதுநாள் ஜலப்பிரளயத்திற்கு பிறகு துண்டிக்கப்பட்டது.எபேசியர் நிருபம் சொல்லு கிற சபை,அது பூமிக்குரியதல்ல.அது பூமியை விட்டு உயர எழுப்பப்பட வேண்டிய சபை. உன்னதத்திற்குரிய சபை. ஆகவேதான் இந்த சபைக்குள் ஒவ்வொருவரையும் வாருங்கள் ...வாருங்கள் என்று அழைக்கிறோம். பெந்தெ கொஸ்தே சபைக்கு வாருங்கள் என்று அழைக்கவில்லை. வேதத் தில் சொல்லப்பட்டிருக்கிற மணவாட்டியாகிய சபைக் குள் வாருங்கள் என்று அழைக்கிறோம். அதற்கு எந்த பெயர் வேண்டுமென்றாலும் வைத்துக் கொள்ளலாம்.இந்த பேழைக்கு ஒப்புமையான சபை மண்ணுக்குரியது அல்ல. இது மேலானதைத்தேடும் விண்ணுக்குரியது. கொலோசெயர் *3:1,2* சொல்லுகிறது **நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவை களைத் தேடுங்கள்.**

**பூமிக்குரியவைகளயல்ல, மேலானவை களையே நாடுங்கள்** என்று பவுல் மேலானவை, மேலானவை என்று இரண்டு விசை அந்த வார்த்தைக்கு அழுத்தம் கொடுக்கிறார். மேலானதைத் தேடும் சபைகள்தான் **அரராத்தில்** தங்கும். அரை குறை யாய் நின்று விடுவதல்ல.**அரராத்** என்பது **தேவனோடு தங்குகிற அனுபவம்.** அந்த பேழை அரராத்தில் தங்கிற்று.எந்த சபை மேலானதை நாடி வானத்திலிருந்து பொழிகிற ஜலமாகிய, ஜீவதண்ணீராகிய தேவஆவி யினா லும், தேவனுடைய வசனத்தினால் பேழையை போல் கொஞ்சம் கொஞ்சமாக மேல் எழும்புகிற அனுபவத்தைப் பெறு கிறதோ, அந்த சபை தேவனோடு தங்குகிற சபை. அது தேவனால் தாங்குகிற சபை. அங்கே வானத்து கிருபையும் ஆசீர்வாதமும் மட்டுமல்ல, கீழேயிருந்து மேலே தள்ளுகிற பூமியின் ஊற்றுக் கண்களாகிய வரங்களும், வல்லமைகளும் அங்கே உண்டு.வரங்களால் அலங்கரிக்கப் பட்டு, கனிகளால் நிரப்பப்பட்டு, தனித்து வாசம் செய்கிற தன்னிகரற்ற சபை. உன்னதத்தை நோக்கி நாளுக்கு நாள் உயருகிற உறுதியான சபை.

இன்று அநேக சபைகள் பெந்தெகொஸ்தேவாக இருக்கட்டும்,எந்த கொஸ்தேவாக இருக் கட்டும், இன்னும் பூமி யோடு ஒட்டிக்கொண்டு தானிருக்கிறது. பூமியின் கவலைகளும்,பூமிக்குரிய



இச்சைகளும், பூமியிலிருந்து கிடைக்கும் ஆசீர்வாதங்களும் அங்கே பிரதானமாய் இருப்பதால் அப்படிப்பட்ட சபைகள் பூமியிலிருந்து எழும்புவதில்லை. தேவனும் விதவிதமான பாம்பாட்டிகளைக் கொண்டு வினோதமாக ஊதினாலும், அதற்கு காது கேட்பதில்லை. காரணம் அவைகள் செவிட்டு விரியன்களாம் (சங் 58 : 5). பூமிக்குரிய அனுபவங்களோடும், பூமிக்குரிய அரசியலோடும், பூமிக்குரிய தந்திரங்களாலும், பூமிக்குரிய அறிவாலும் , பூமிக்குரிய கறைகளோடும், பூமிக்குரிய வரைமுறைகளோடும் நடந்து கொண்டிருக்கிற அநேக சபைகள் இங்கே உண்டு. வானத்திலிருந்து வரும் ஜீவதண்ணீர் (சத்தியம் ) இருக்காது.மாறாக சீர்கேடும் கிழவிகள் பேச்சும் கட்டுகதைகளும் அதிகமாக இருக்கும் (1தீமோ 4 :7). **மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்பட்டாலும், உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறார்கள்** (மத் 23 : 28) தாங்களும் பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதில்லை. பிரவேசிக்க பிரயாசப்படுகிறவர்களையும் தடைசெய்கிறவர்கள். இவர்களால் சபைக்கு இடறல், கிறிஸ்தவத்திற்கு இடறல், ஊருக்கு இடறல், உலகத்திற்கே இடறல்.சபை எப்படி உன்னத அனுபவத்தைப் பெறும்! எப்படி அரராத்தில் தங்கும்! பூமியைவிட்டு எப்படி எழும்பும்! பவுல் சொல்கிறார் எழுந்த... துண்டானால்... இன்று அநேக சபைகள் துண்டாகத்தானே காட்சி யளிக்கிறது. கிறிஸ்துவுக்கும் அவர்களுக்கும் எந்தவிதத்தில் இணைப்பு ! **தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல பெலத்திலே உண்டாயிருக்கிறதே!** (1கொரி 4 : 4).

பேழைக்குள் இருந்தது மொத்தம் எட்டுபேர்.சபைகளும் ஜனங்களும் கொஞ்சம் காதை திறந்து கொடுத்து இரண்டு எட்டு எடுத்து வைத்தால்,நாமும் பேழைக்குள் பிரவேசிக்க முடியும்.உயர உயர நாமும் போகலாம் உன்னதத்தை அடையலாம்.

**ஜாதியைக் குறித்து வாதிக்கிறோம்.. போதிக்கிறோம். ஆனால் தனக்கென்று வரும்போது சாதிக்கிறோமா? இல்லை, ஜனங்களை, சபைகளை சோதிக்கிறோமா? பேழை எழும்பாது. மாறாக சபைதான் குழம்புது.**

பேழைக்குள் சகலவிதமான பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஜோடு ஜோடாக இருந்தது.பேழையின் பயணத்தில் எந்த ஒரு சப்தமோ, சண்டையோ, சச்சரவோ காச் மூச்...குரலோ உள்ளே காணப்படவில்லை. கேட்கப்படவும் இல்லை. எந்த பற்றாக்குறையும் இருந்ததாக தெரியவில்லை. அந்த எட்டு பேருக்கு மாத்திரமல்ல, எல்லா வகை பிராணிகளுக்கும் உணவிற்கோ, உறக்கத்திற்கோ பற்றாக்குறையில்லை. மாறாக வற்றாத இருப்பும், செழிப்பும் உள்ளேயிருந்தது. சபைக்குள் ஐம்பதுபேர் இருந்தாலும், ஐம்பது வகையான பிரச்சனை உள்ளே வருகிறது.இந்த ஜாதி,அந்த ஜாதி, உயர்ஜாதி, கீழ் ஜாதி,உயர்ந்தவன், தாழ்ந்தவன், படித்தவன், பாமரன்,பணக்காரன், ஏழை, வெள்ளை, கறுப்பு,அழகு,அழகில்லை..பாடுகிறவர்கள் , பாட்டு வராதவர்கள், ஜெபிப்பவர்கள், ஜெபிக்கத் தெரியாதவர்கள், ஊழியம் செய்கிறவன், ஊழியம் செய்யாதவன்..இத்யாதி.. இத்யாதி.. பேழை எப்படி பூமியை விட்டு எழும்பும்! அது எலும்பும் தோலுமாகல்லவா இருக்கும்! ஜாதியைக் குறித்து வாதிக்கிறோம்.. போதிக்கிறோம்.ஆனால் தனக்கென்று வரும்போது சாதிக்கிறோமா?இல்லை, ஜனங்களை, சபைகளை சோதிக்கிறோமா? பேழை எழும்பாது. மாறாக சபைதான் குழம்புது.

நாற்பது நாள் பெய்த மழையால் உண்டான ஜலப்பிரளயம் பேழையை பூமியிலிருந்து கிளம்பப் பண்ணிற்று. மோசேயின் நாற்பது ஆண்டுகள் ஆடுகளின் அனுபவம் கோத்திரங்களுக்கு தலைவனாய் எகிப்தை விட்டு கிளம்பப் பண்ணிற்று. இஸ்ரவேல்

ஜனங்களின் நாற்பது ஆண்டு வனாந்தரப் பயணம் தேவனின் குணாதிசியங்களை யும்,மகத்துவத்தையும் வேதப்புத்தகத்தின் மூலமாக நாம் காணும்படியாக செய்து, நம் இருதயத்தின் யோசனைகளை அவருக்கு நேராக எழும்ப பண்ணிற்று.தாவீதின் நாற்பது ஆண்டு அரசாட்சியின் அனுபவங்கள் அவனு டைய விழுகையையும் எழுகையையும் நமக்கு புரியவைத்து, நாமும் ஆண்டவருடைய இருதயத்திற்கு ஏற்றவர்களாக நடக்க வேண் டும் என்ற தீர்மானத்தை நம்முடைய சிந்தையி லிருந்து எழும்பப்பண்ணிற்று. எலியாவின் நாற்பது நாள் ஓரேப்பை நோக்கி ஓடிய ஓட்டம் சூரைச்செடியின் சோர்வை மாற்றி, தேவனு டைய சித்தத்தை நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்ற வேகத்தை அவனிலிருந்து எழும்பப் பண்ணிற்று. இயேசுகிறிஸ்துவின் நாற்பது நாள் உபவாசம், பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற ஊழியத்தின் பாதையை நோக்கி கிளம்பப் பண்ணிற்று.

பேழையாகிய சபைக்குள் இருக்கும் நாம் நாற்பது என்ற அனுபவத்திற்கும் ஒருபடி மேலாக ஐம்பது என்ற பெந்தெகொஸ்தே நாளின் அனுபவத்திற்கு அப்போஸ்தலர் 2 –ம் அதிகாரத்திற்கு நேராக கிளம்பலாமா?அங்கே பரிசுத்த ஆவியின் நிறைவு உண்டு, வரங்கள் உண்டு ,வல்லமை உண்டு, சுவிசேஷப்பணி உண்டு, வாக்கு வல்லமை உண்டு, ஆத்தும பாரம் உண்டு, உபதேச வைராக்கியம் உண்டு, ஆத்தும இரட்சிப்பு உண்டு.கர்த்தருடைய சபையாக நம்மை மாற்றி(இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்) அவர் வரும் நாளிலே நம்மை மத்திய ஆகாயத்திற்கு கிளம்பப் பண்ணுவார் .அல்லேலுயா !!

# 2. சபையின் ஒழுங்கு



“**நீ பேழைக்கு ஓர் ஜன்னலை உண்டு பண்ணி,மேல் தட்டுக்கு ஒரு முழத்தாழ்த்தி யிலே அதை செய்து முடித்து,பேழையின் கதவை அதின் பக்கத்தில் வைத்து,கீழ் அறைகளைகளையும், இரண்டாம் தட்டின் அறைகளையும், மூன்றாம் தட்டின் அறை களையும் பண்ண வேண்டும்** ”(ஆதி 6 :16).

பேழைக்கு மேல் தட்டு, இரண்டாம் தட்டு இது மூன்றாம் தட்டு, ஒரு ஜன்னல்,ஒரு கதவு அவைகளின் இருப்பிடம் என்ற அமைப்பின் படி அது கட்டப்பட வேண்டும் என்ற ஒரு ஒழுங்கை கர்த்தர் தந்தார். அதன்படிதான் அது செய்யப்பட்டது. சபைக்கு ஒழுங்கு உண்டு. அது கிறிஸ்துவின் சரீரம்.தலை கிறிஸ்து.நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்கள் (எபே 5 :23,30) இதுதான் ஒழுங்கு.இன்று அநேகர் தலை இருக்க வேண்டிய இடத்தில் தங்களை நிறுத்திக் கொள்கிறார்கள்.தங்களை அநேக வேளைகளிலே கிறிஸ்துவுக்கும் மேலாக உயர்த்திக்கொள்கிறார்கள் இது ஒழுங்கு அல்ல. ஒழுங்கீனம். **நான் கர்த்தர், என்**

**மகிமையை வேறொருவருக்கும்... கொடேன்** (ஏசாயா 42:8). தலைவர்கள் தங்களையே ***Focus*** பண்ணுகிறார்களேயொழிய உண்மையான தலை மறைந்து கிடக்கிறது. அப்படிப்பட்ட தலையான ஊழியங்களை மனுஷர் அங்கீகரிக்கலாம். ஆனால் தேவன் ஒருபோதும் அங்கீகரிக்கமாட்டார். அவர் ஒழுங்கை எதிர்பார்க்கிறார்.

**இன்று சபை தலைக்குத்தான் பயப்பட வேண்டுமே யொழிய தலைவர் களுக்கல்ல. தவைர்களை கனம் பண்ணுங்கள். தவறல்ல. பயம் வேறு.கனம் வேறு.**


தலைக்குரிய வழிமுறைகளையும், ஆலோசனைகளையும் தள்ளி வைத்துவிட்டு தங்கள் சொந்த வழிமுறை களையும் ஆலோசனைகளையும் செயல்படுத்துவது சபைக்கு ஒழுங்கு அல்ல. தலைவர்கள் என்ற நிலையில் இருப்பவர்களுக்கு உத்தரவாதம் உண்டு. ஏனெனில் எபே 5:24 சொல்லுகிறது சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்படிகிறது போல....கிறிஸ்துவின் உபதேசத்தை தள்ளி வைத்துவிட்டு மனுஷ உபதேசத்தை திணிப்பது,தேவனுடைய கற்பனைகளை பின்பற்றாமல் மனுஷ கட்டளைகளை பின்பற்றுவது ஒழுக்கம் அல்ல.அது ஒழுங்கீனம் (மத்15:9). இன்று சபை **தலை**க்குத் தான் பயப்பட வேண்டுமேயொழிய தலைவர்களுக்கல்ல.தவைர்களை கனம் பண்ணுங்கள். தவறல்ல. பயம் வேறு. கனம் வேறு. இன்று ***Main Line Church*** என்று சொல்லிக் கொள்கிற பாரம்பரிய சபைகளுக்கு **தலை**க்கு பயப்படுவதைக் காட்டிலும் **தலை**வர்களுக்கு பயப்படுவதுதான் மிகுதியாயிருக்கிறது. ஆகவேதான் தலையின் தலையான கற்பனைகள் அங்கே தலை காட்ட முடியவில்லை. மனுஷ கற்பனைகளின் ஆதிக்கம் தான் அதிகம்.

மேல்தட்டு, இரண்டாம் தட்டு, மூன்றாம் தட்டு என்ற ஒழுங்கு சபையில் காணப்பட வேண்டும்.மேல் தட்டு– கிறிஸ்து.இரண்டாம் தட்டு–ஊ ழியர்.மூன்றாம் தட்டு –விசுவாசிகள். இது ஒரு ஒழுங்கு. இடம் மாறிவிட்டால் பேழை மிதக்காது. மூழ்கிவிடும். சில சபைகளிலே மாதந்தோறும் லட்சங்கள் காணிக்கை கொடுக்கிறவர் இரண்டாம் தட்டுக்கு வந்துவிடுவார். அவர் செய்கிற தவறை சுட்டிக்காட்டக் கூடாது. கண்டு கொள்ளவே கூடாது. கண்டு கொண்டால் காணிக்கை போய் விடுமோ! என்ற பயம்தான். இது ஒழுங்கல்ல.

பேழைக்கு ஒரு கதவு ஒரு ஜன்னல் தான். கதவு எதற்கு?அதுதான் வழி.ஆம், **நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்** (யோவான் 14 : 6). கத்தோலிக்கத் திருச்சபையிலே அநேக கதவுகள் உண்டு. யாரிடத்திலும் போய் மன்றாடலாம். பொருத்தனை பண்ணலாம். மொட்டையும் போடலாம்.இது சபைக்கு ஒழுங்கல்ல. **தேவன் ஒருவரே,தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே** (1தீமோ 2 : 5). பக்கவாட்டில் கதவுகள் வைக்கப்படவில்லை. வைக்கவும் கூடாது. இது தேவனுடைய கட்டளை.இந்த கதவை பூட்டவும் திறக்கவும் அவர் ஒருவருக்குத்தான் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர் **பரிசுத்தமுள்ளவரும், சத்திய முள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக் கூடாதபடி திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக் கூடாதபடி பூட்டுகிற வருமாயிருக்கிறவர்** (வெளி 3 :7). ஒரே சாவிதான். அது அவர் கையில்தான் இருக்கிறது. இராயப்பர் கையிலோ வேறு எந்த புனிதர் கையிலோ அவர் கொடுக்கவில்லை. இல்லாத சாவியை இருக்கிறதாய் சொல்லி வருவதால் பேழை இன்னும் பூமியோடு ஒட்டிக் கொண்டுதானிருக்கிறது.உன்னத அனுபவத்திற்கு எழும்ப முடியவில்லை. நமக்குத் தேவை ஒரே நம்பிக்கை, ஒரேவிசுவாசம், ஒரே ஞானஸ்நான (மனந்திரும்புதலுக்கேற்ற) மாகிய

அந்த ஒரே கதவு. அவர்தான் ஒரே இரட்சகராகிய இயேசு.இரட்சிப்பு அவரே. ஆகவேதான் **பேழையின் கதவை கர்த்தரே அடைத்தார்** (ஆதி 6 :16).

ஏன் கர்த்தரே அடைத்தார்?நோவா எவ்வளவோ பிரசங்கித்தும் ஒருவர்கூட மனந்திரும்பவில்லை.மழை ஜலப்பிரளயம் என்பதையெல்லாம் அவர்கள் நம்பத் தயாராக இல்லை.அனால் நோவா எச்சரித்த மழையைக் கண்டவுடன் , ஜலம் பெருகுவதை கண்டவுடன் அநேகர் நோவாவிடத்தில் ஓடி வந்து கதவைத் திற...கதவைத் திற.. என்று அபயக் குரல் எழுப்பியிருக்கலாம்.நோவாவும் மனம் இரங்கி கதவை திறந்து விட்டால்... ( நோவா என்றால் இளைப்பாறுதல் என்று பொருள்) தேவனுடைய திட்டம் அது அல்ல, எச்சரிப்பு வரும் போதே மனம் திரும்புவது தான். ஆகையால் நோவாவின் இளைப்பாறு தல் தரும் உள்ளத்தை அறிந்த கர்த்தர் அந்த காரியத்தை தானே செய்தார். அருமை யானவர்களே! சொன்னபடியே இயேசு சீக்கிரம் வரத்தான் போகிறார். மனந்திரும்பு வோம். இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வோம். புதிய மனுஷனை தரித்துக் கொண்டதற்கு அடையாள மான முழுக்கு (அடக்கம்) ஞானஸ்நானம் எடுப் போம். கர்த்தருடைய சபையிலே இணைவோம். மணவாட்டி என்ற ஸ்தானத்தை பெறுவோம். மணவாளனாகிய இயேசுவை சந்திக்க ஆயத்தப்படுவோம். பரலோக இராஜ்யத்தை சொந்தமாக்கிக் கொள்வோம். **இனி காலம் செல்லாது.**



ஜன்னல் ஒன்றுதான். இவ்வளவு பெரிய பேழைக்கு ஒரு ஜன்னல்தானா! ஜன்னலின் பயன் என்ன? 1.வெளிச்சம் 2.காற்று. சபைக்குள் வெளிச்சம் தேவை.இது சூரியனால் கிடைக்கும் வெளிச்சமோ,இல்லை மின்சாரத்தால் கிடைக்கும் வெளிச்சமோ இல்லை.இது சபை விசுவாசிகளிடமிருந்து கிடைக்கும் வெளிச்சம். சபை ஊழியரிடமி ருந்து கிடைக்கும் வெளிச்சம். மனுஷர் "**உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது**" (மத் 5: 16). ஒரே ஜன்னல். ஒரே வெளிச்சம் . அது என்ன?நம்முடைய நற்கிரியை.ஒரு சபை வெளிச்சமடைய, ஜனம் திரளாய் கூட பல வழிகள் உண்டு. பல ஜன்னல்களை அமைத்துக் கொள்ளலாம். ஆனால் அது பிதாவுக்கு மகிமையானதல்ல.இந்த ஊரில் நமக்கு மகிமையாக இருக்கலாம்.ஆனால் சபை மறுமையில் வெறுமையாகத்தான் இருக்கும். **நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமா யிருக்கிறீர்கள்**(மத் 5 : 14).

காற்றை உள்ளே கொண்டு வரும் ஜன்னல். இது என்ன காற்று? **உபதேசக் காற்று.** ஒரு ஜன்னல் –ஒரு உபதேசத்தைக் குறிப்பது. பல ஜன்னல்கள் – பல உபதேசங்களை குறிப்பது. நாம் இனி குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதுக் கேதுவான தந்திரமுள்ள போதக மாகிய **பலவித காற்றினாலே** அலைகளைப் போல அடிபட்டு அலைகிற வர்களாயிராமல், அன்பு டன் சத்தியத்தைக் கைக் கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார் (எபே 4 : 14,15). பல ஜன்னல்கள்– பலவித காற்று.இன்று அநேக சபைகள்

ஆதாயத்திற்காக(ஆத்தும வளர்ச்சியல்ல) ஆள் வளர்வதற்காக உபதேசத்தை எப்படி வேண்டுமென்றாலும் மாற்றி, தங்களுக்கு ஆதாயத்தை தேடிக் கொள்கிறார்கள்.அடிப்படை சத்தியத்திற்கே தங்களை விரோதிகளாய் மாற்றிக் கொள்கிறார்கள். இது எத்தனை பரிதாபம்.

பவுல் சொல்லுகிறார் **சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி,கடிந்து கொண்டு, புத்தி சொல்லு.**

**உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல்,செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாய் சேர்த்துக் கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக் கதைகளுக்குச் சாய்ந்து போகும் காலம் வரும். நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய். உன் ஊழியத்தை நிறைவேற்று.** (2 தீமோ 4 : 2–5).

ஆம்,பலவித காற்றாகிய பலவித உபதேசங்கள் இன்று சபைகளை மயக்குகிறது. மங்கச் செய்கிறது. பொங்கி நிற்க வேண்டிய சபைகள் மங்கி நிற்பதற்குகாரணம் என்ன? உபதேசத்தேிற்கு முக்கியமின்மை உபதேசக்கோளாறு. சத்தியத்தை வாஞ்சையோடு கேட்கக் கூடாதபடி இருக்கிற மடமை. அதே நேரம் பக்க வாத்தியங்களுக்கு பலே போட எப்போதுமே உற்சாகம்.இன்று சத்தியத்திற்கு நீ கொட்டாவி விட்டால் நித்தியத்திற்கும் கொட்டாவி தான். நித்தியராஜ்யம் கண்டடைய முடியாது. ஆக்கினைதான் மிஞ்சும். எச்சரிக்கையாயிருப்போம்.

**இன்று சத்தியத்திற்கு நீ கொட்டாவி விட்டால் நித்தியத் திற்கும் கொட்டாவி தான். நித்திய ராஜ்யம் கண்டடைய முடியாது. ஆக்கினைதான் மிஞ்சும்.எச்சரிக்கை யாயிருப்போம்.**

**பிரியமானவர்களே, உலகத்தில் அநேக கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்** (1 யோவான் 4 :1).

ஆம், பேழைக்கு ஒரு கதவு, ஒரு ஜன்னல்தான்.மீறினால் நம் கிறிஸ்தவ வாழ்க்கை முழுவதும் பின்னல்தான். விழிப்பாயிருப்போம். **சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யக்கடவது** (1கொரி4 :40).

**உமக்கு பிரியமானதை செய்ய எனக்கு கற்றுத்தாரும் இயேசுவே !**

# 3. அ(ழை)மைப்பு



**“அதை உள்ளும் புறம்புமாக கீல் பூசு”** (ஆதி 6 :14).சபையின் அழைப்பு புறம்பான தோற்றத்தில் மட்டும் அல்ல. உள்ளேயும்தான். அதாவது உள்ளான வாழ்க்கை அமைப்பு. அழைப்பின் கனம் அறிந்தவன்.அமைப்பையும் முக்கியப்படுத்துவான்.கீல் என்பது என்ன? திறப்பை அடைக்கக்கூடிய திரவம்.யாத் 2:3ல் குழந்தை மோசே வைக்கப்பட்ட நாணற் பெட்டிக்கு பிசினும் கீலும் பூசப்பட்டது (யாத் 2 :3).நாணற்பெட்டிக்கு இந்தப்பிசினும் கீலும் உள்ளும் புறம்பும் என்று எழுதப்படவில்லை. ஆனால் பேழைக்குத் தேவை.நாணற்பெட்டி

குழந்தை மோசேயோடு முடிந்து போவது. அந்தப் பெட்டி பயணத்திற்கு அல்ல.ஒளித்துக்கொள்ள, நாணலுக்குள்ளே ஒளிந்து கொள்ள மட்டும்தான். ஆனால் பேழையின் பயணம் வெகு தூரம். ஜலப்பிரளயத்தை எதிர் கொள்ள வேண்டும். உள்ளிருப்பு அதிகம். உள்ளிருப்போரின் நீதி இந்த உலகத்திற்கு மிகவும் அவசியம்.ஆகவே பேழைக்கு பாதுகாப்பு மிகவும் முக்கியம். உள்ளேயும் பூச வேண்டும். வெளியேயும் பூச வேண்டும்.

எரேமியா 8:22 சொல்லுகிறது. **கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரண வைத்தியனும் அங்கே இல்லையோ?பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற் போனாள்?** சொஸ்தமடைவதற்கேதுவான பிசின் தைலம் **இயேசுவின் இரத்தமே!** மட்டுமல்ல, இயேசுவுக்கு சமீபமாக ஒருவனை கொண்டுவருவதும் **இயேசுவின் இரத்தமே!** எபேசியர்2:13 யை கவனியுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். மேலும் கொலோ 1:20 ன் படி அவருடைய இரத்தம் அவரோடு நம்மை ஒப்புரவாக்கியது. ஆம்,சபைக்கு மிகவும் அவசியமான புரிந்து கொள்ளுதல் இயேசுவின் இரத்தத்தினால் கிடைத்த மேன்மை,இரட்சிப்பு, விடுதலை, சமாதானம்.இதை அநேகர் மறந்து விடுகிறார்கள். காரணம், அநேகர் சபையாக மாறும் போது(பேழை)வெளியே மட்டும் கீல் பூசி விட்டு உள்ளே பூசின தோற்றத்தோடு (உண்மையான மனந்திரும்புதல் இல்லாமல்) இருக்கிறபடியால், கொஞ்ச நாளில் பேழை மூழ்கும் நிலைக்கு தள்ளப்படுகிறது.சில பேழைகள் உள்ளேயும் வெளியேயும் பூசியிருந்தாலும், பயணங்கள் நாள் படும்போது, நாளுக்கு நாள் புதிதாகுகிற அனுபவம் இல்லாதபடியால் தண்ணீர் (சத்துரு) உள்ளே புகுந்து பேழையை கொஞ்சம் கொஞ்சமாய் மூழ்கடித்து விடுகிறது.

**உள்ளே பரிசுத்தம், வெளியே பாவத்தின் சத்தம். உள்ளே அந்நிய பாஷை,வெளியே அநியாய பாஷை. உள்ளே அன்பு வெளியே அம்பு. உள்ளே சத்தியம், வெளியே வெறும் சத்தம்.உள்ளே பாட்டு, வெளியே வேட்டு.பிசின்தைலம் சரியாக பூசப்பட்டு இணைக்கப்படவில்லை.ஆகவே கிறிஸ்தவ வாழ்க்கையும் பிசு பிசுத்துவிட்டது.**

ஆபேலின் இரத்தம் பேசினதைக் காட்டிலும் அதிகமாய் பேசுகிற இயேசுவின் இரத்தம் நம் செவிகளின் வழியாய் இருதயத்திற்கு செல்ல வேண்டும். அப்போது உள்ளும் புறம்பும் மேய்ச்சலைக் கண்டடைய முடியும். இல்லாவிடில் உள்ளே பரிசுத்தம், வெளியே பாவத்தின் சத்தம். உள்ளே அந்நிய பாஷை, வெளியே அநியாய பாஷை. உள்ளே அன்பு வெளியே அம்பு. உள்ளே சத்தியம், வெளியே வெறும் சத்தம்.உள்ளே பாட்டு, வெளியே வேட்டு. பிசின்தைலம் சரியாக பூசப்பட்டு இணைக்கப் படவில்லை.ஆகவே கிறிஸ்தவ வாழ்க்கையும் பிசு பிசுத்துவிட்டது. **அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும் தேவன்தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படி தப்பித்துக் கொள்வோம்!** (எபிரெயர் – 2 :4).

## 4.பேழையின் அளவு



**நீ அதை பண்ண வேண்டிய விதம் என்னவென்றால், பேழையின் நீளம் முந்நூறு முழமும், அதன் அகலம் ஐம்பது முழமும், அதன் உயரம் முப்பது முழமுமாய் இருக்க வேண்டும்** (ஆதி 6 : 15).

தேவன் எதற்கும் ஒரு அளவை வைத்திருக்கிறார். சபைக்குள் பூரண அன்பு, உள்ளான அன்பு வெளிப்பட வேண்டும். ஏனெனில் பேழையாகிய "**கிறிஸ்துவின் அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்திரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்**

**தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும் , நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறேன்**" (எபே 1 : 18,19). என்று பவுல் வெளிப்படுத்துகிறார். அவருடைய அளவுக்கெட்டாத அன்பு என் சொல்லப்படவில்லை. மாறாக, அறிவுக் கெட்டாத அன்பு என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. செடியை வைத்தவுடன் கனியை எதிர்பார்க்க முடியாது. அது வளர்ந்து, வேரூன்ற வேண்டும். அதற்குப்பிறகுதான் கனி. நாம் அன்பிலே வேரூன்றி இருக்கிறோமா! (எபே 3 :17) சபை அன்பினால் வேரூன்றி இருக்கிறதா! சபைக்குள் ஏன் கனி இல்லை? அன்பிலே இன்னும் வேரூன்ற வில்லை. வேறு வேறு காரியங்கள் உள்ளே நுழைந்தபடியால் வேரூன்ற முடியவில்லை. வேரூன்றி விட்டதாக பாவலாதான் அதிகமாய் காணமுடிகிறது. இதைத்தான் பவுல் 1 கொரி 8:8இல் உங்கள் அன்பின் உண்மையை சோதிக்கும் பொருட்டே சொல்லுகிறேன் என்றுரைக்கிறார். அன்பிலே உண்மை தேவை. மாய்மாலமான அன்பு தேவனுடைய பார்வைக்கு அருவெறுப்பு. உண்மையான அன்பு பேச்சோடு நின்று விடுவதல்ல. செயலிலே விளங்கும். மக்கெதோனியா சபையார் கொடிய தரித்திரத்திலும்மிகுந்த சந்தோஷத்தோடு உதாரத்துவமாய் தாங்குகிறார்கள் (1கொரி 8 : 1,2). இதுதான் உண்மை யான அன்பு. பவுல் அதை மெச்சிக்கொள்கிறார். பேழையின் அளவை கர்த்தர்தான் கொடுத்தார். நோவா தெரிந்து கொள்ளவில்லை. சபைக்குள் அன்பிற்கும் ஒரு அளவு உண்டு. உண்மை அன்பு, பூரண அன்பு தேவை. நான் அதை சொல்லவில்லை. ரொம்ப அன்பாக இருக்கிறேன் என்று சொல்லி அது காதலில் முடிந்துவிடும் ஆபத்து உண்டு. அவரவருக்கு இருக்கும் தாலந்துகள் பயன்படுத்த வேண்டும். இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு சுற்றி வருவது அல்ல. ***There is a Limit.*** இல்லாவிட் டால் அது மேட்டிமையில் கொண்டு வந்து நிறுத்திவிடும். பிறருக்கு உதவிசெய்வதிலும் இல்லாதவர்களை தாங்குவதிலும் ஓர் அளவு உண்டு. ***over*** ஆனால் நான் ஒருவன்தான் என்ற பெருமை உள்ளுக்குள் வந்துவிடும். பின்பு என்ன? சூரைச்செடி தான். கிறிஸ்துவின் அன்பு ஒன்றுக்குத்தான் அளவு கிடையாது. அளவு இருந்திருந்தால் சிலுவை மரணத்தை தள்ளி வைத்திருப்பார். ஆனால் சிலுவையிலே கடைசித்துளி இரத்தத்தையும் சிந்தி நமக்கு புது ஜீவனை தந்தார்.

**ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத்தக்கதாய் கிரியை செய்கிறபடியே...** (எபே 4 :16). நாமும் சபைக்குள் எந்த காரியத்திலும் ஓர் அளவைக் காத்துக்கொள்ளுதல் நல்லது. பவுலைக் கவனியுங்கள். ஊழியமாயிருந்தாலும் சரி, அது ஒரு அளவுதான். நாங்கள் அளவுக்கு மிஞ்சி மேன்மை பாராட்டாமல், உங்களிடம் வரைக்கும் வந்தெட்டத்தக்கதாக, தேவன் எங்களுக்கு அளந்து

பகிர்ந்த அளவுப் பிரமாணத்தின்படியே மேன்மை பாராட்டுகிறோம்.

“**உங்களிடத்தில் வந்தெட்டாதவர்களாய் நாங்கள் அளவுக்கு மிஞ்சி போகிறதில்லை நாங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்த உங்களிடம் வரைக்கும் வந்தோமே.**

**எங்கள் அளவைக் கடந்து மற்றவர்களுடைய வேலைக்குட்பட்டு மேன்மை பாராட்டமாட்டோம்**”(2 கொரி 10:13 –15). என்று குறிப்பிடுவதைக் கவனியுங்கள்.ஆம், எதிலும் ஒரு அளவு வேண்டும். அதே நேரம் கொஞ்சத்திலும் உண்மை வேண்டும்.

**நீ கொஞ்சத்தில் உண்மையாயிருந்தால்....**



## 5. பயணத்தின் வெற்றி

“**ஜலப்பிரளயத்துக்கு தப்பும்படி நோவாவும் அவனுடனேகூட அவன் குமாரரும் அவன் மனைவியும் அவன் குமாரரின் மனைவிகளும் பேழைக்குள் பிரவேசித்தார்கள்** ” (ஆதி 6 : 7).

எந்த பயணத்தின் வெற்றியும் நம்முடைய ஐக்கியத்திலும் ஒருமனப்பாட்டிலும்தான் இருக்கிறது. நோவா குடும்பத்தோடு பேழைக்குள் பிரவேசித்தான்.பயணம் இனிதே முடிந்தது.சபைக்குள் நாம் குடும்பமாய் காணப்படுகிறோமா? இல்லை அங்கொன்று இங்கொன்று பிச்சுகிட்டு கிடக்கா! இல்லை ரொம்ப பீத்திகிட்டு கிடக்கா? (எங்க சபைதான் ஆதி சபை, தாய் சபை…பெரிய ஊழியர் என்றெல்லாம் பெருமை பாராட்டல் கேஸ் ..) அப்படிப்பட்டவர்களுக்காக ஜெபிப்போம். அவர்களும் சாந்தமாய் சத்தியத்தை ஏற்றுக் கொண்டு மணவாட்டியாக மாறட்டும்.அதுதான் எங்களுடைய விருப்பம். எல்லோருடைய விருப்பம்.ஆண்டவரின் விருப்பமும்கூட. ஏனெனில் மனக்கண்கள் திறக்கப்படுவது உங்கள் கையில் என்கையில் இல்லை அது தேவனுடைய ஈவு (எபே 2 :8).

நோவாதான் அந்த பேழையை செய்து முடித்தான்.குடும்பத்தார் வந்து உதவி செய்ததாக வேதத்தில் எங்கேயும் பார்க்க முடியவில்லை. ஆனால் நோவா நீதியை பிரசங்கித்தான் (2 பேதுரு 2 : 5).குடும்பத்தார் கேட்டு மனந்திரும்பினபடியினால் பேழைக்குள் தாங்களாகவே சென்றனர்.யாரையும் கடத்தி உள்ளே கொண்டு போகவில்லை. நாமும் வீதி வீதியாக நீதியை பிரசங்கிப்போம் சேதி கேட்டு வந்தால்(காதுள்ளவன்கேட்கக்டவன்)இரட்சிப்பு, விடுதலை, பரலோகம். வேளை வருவதற்குள் பேழைக்குள் வந்தால் நலம்.இல்லாவிடில் தேவனுடைய பார்வையில் அவர்கள் என்றும் ஏழையே ! (ஆவிக்குரிய தரித்திரம்).

யோசுவா சொல்லுகிறான் “**நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்**”.

நாமும் சேவிப்போமா? வாருங்கள் பேழையை நோக்கி...கர்த்தர் கதவருகே நின்றுகொண்டிருக்கிறார் .இன்னும் கதவு அடைக்கப்படவில்லை. சீக்கிரம்…சீக்கிரம்..இடிசத்தம் கேட்குது...இருண்டுகிட்டு வருது... சீக்கிரம்.... சீக்கிரம்.

**அந்த நாள் மிக சமீபமே**

**சுத்தர்கள் யாவரும் சேர்ந்திடவே**

**தேவ எக்காளம் வானில் முழங்க**

**தேவாதி தேவனை சந்திப்போமே**

• • •

## சிந்தனைக்கு

- அறிவை பயன்படுத்துகிறவனுக்கு ஆவியின் அனுபவம் புரியாமல் இருக்கும்
  அறிவை பிரதானப்படுத்துகிறவனுக்கு ஆவியின் அனுபவம் பைத்தியமாயிருக்கும்.
- எதற்கும் பயம் - அர்ப்பணிப்பில் ஓட்டை
  எதற்கும் சுயம் - அழைப்பில் கோட்டை.
- ஒலியை சரியாய் பிடித்தால் ஒளியாக மாறுவோம்
  வழியை சரியாய் பிடித்தால் வலி நீங்கி வாழ்வோம்.
- மலை நாட்டை தாரும் என்று கேட்ட நாட்கள் அது
  மலையளவு நோட்டை தாருங்கள் என்று கேட்கும் நாட்கள் இது.
- அனிச்சை செயல் தூக்கத்தில் நடக்கும்,
  தன்னிச்சை செயல் துக்கத்தில் முடிக்கும்.
- கிறிஸ்துவின் வழி இடுக்கமும் நெருக்கமுமே
  விசாலமான வழி என்பது ஆத்துமாவிற்கு விசனமான வழி.
- கவலை எதிர்காலத்தை நிர்ணயிப்பதில்லை
  அது நிகழ்காலத்தைப் பாழாக்குகிறது.

## திரு குரல்

1.நில்லாதவற்றை நிலையன - என்றுணரும்
சிற்றறிவு நீங்கல் சிறப்பு.

2.நேற்றிருந்தவன் இன்றில்லை என்ற
பெருமையை உடையது இவ்வுலகு.

3.உறங்குவது போலும் இறப்பு - கிறிஸ்துவில்
இறப்பு உறங்கி விழிப்பது போன்று.

4.மெய்யுணர்வு பெற்று தெளிந்தவர்க்கு - அவ்
வையகத்தின் வீடு அண்மையே.

## வானவெடி

தொலைக்காட்சிகளிலே வரும் பிரசங்கியார்களில் சிலர் சங்கு தெறிக்க கடும் பக்தி வைராக்கியத்தை வெளிப்படுத்துகிறார்கள். கேட்க நன்றாகத் தானிருக்கிறது, நடைமுறை வாழ்க்கையில் கிறிஸ்துவுக்குள் இவர்களின் பங்கு அந்த அளவுக்கெல்லாம் கிடையாது என்ற சத்தமல்லவா காதுகளில் வந்து விழுகிறது. ஒருவேளை தொலைக்காட்சிக்காக உருவாக்கப்பட்ட வைராக்கியமா தெரியவில்லையே! கர்த்தர் சங்கின் அளவை பார்ப்பதில்லை. அவருக்குரிய பங்கின் அளவு என்னவென்றுதான் கவனித்துப் பார்க்கிறார். சங்கா ?...இல்லை..பங்கா?

# பெரும்பாடு மறைந்தது



அவள்
பெயர் சொல்லப்படாதவள்
ஆனால்
பெரும்பாடு என்னும் நோய்
பெரும்பாடு படுத்தியதால்
பெரும்பாடு பட்டவள்

பெரும்பாடு பட்டும்
பெரும்பாடு தீரவில்லை;
அரும்பாடு பட்டும்
அவள் பாடு தீரவில்லை!

வைரங்கள் செலவழித்தும்
துயரங்கள் தீரவில்லை
பன்னிரெண்டு வருடமாய்
ஊற்றெடுத்த உதிரப்போக்கு
துளிபோலும் குறையவில்லை!

கட்டழகு மேனியும்
கட்டுவிட்டு போனது
சுட்டு போட்ட கருவாடு போல்
பட்டு மேனி ஆனது

விதியின் கரங்கள்
வாழ்க்கைக் கதவை மூடியது
அவள்
மதியின் விரல்களால்
நம்பிக்கை சாளரத்தை
திறந்து வைத்தாள்

இயேசுவின்
பார்வை பட்டாலே
பார்வை கிடைக்கும்
என்ற நற்செய்தி
அவள் சிந்தைக்குள்
கூடு கட்டியிருந்தது

கேள்வி பட்டவள்
யாரையும் கேட்காமல்
யாருக்கும் தெரியாமல்
விரைந்து வந்தாள்
மறைந்து நின்றாள்

கூட்ட நெரிசலில்
இயேசுவுக்கு
எட்ட நின்றவள்
கிட்ட வந்தாள்
அவரின் வஸ்திரத்தை
சட்டென தொட்டாள்.

பல கைகள் தொட்ட போதும்
அவள் கை பட்டபோது
வல்லவரிடமிருந்து
வல்லமையொன்று
வல்லூறு வேகத்தில்
அவளுக்குள் பாய்ந்தது

பூட்டியிருந்த கைவிலங்கு
உடைபட்டு விழுவது போல்
வியாதி அவளிடமிருந்து
விடைபட்டு மறைந்தது
உதிரத்தின் பெருக்கெடுப்பும்
தடைபட்டு போனது
அவளும் சுகம் பெற்று
நிமிர்ந்து நின்றாள்.

மனிதா...
நீ இயேசுகிறிஸ்துவை
தொட்டுப்பார்ப்பது எப்போது?
வாழ்க்கையின்
பெரும்பாடுதீருவது எப்போது?

**அல்பா என். ஆசைத்தம்பி (ஆவடி 9841166883 ).**




## கவனியுங்கள்

கடந்த மாதம் 15 பேர் எழுதியதில் 13 பேர் சரியான பதிலை கொடுத்திருக்கிறார்கள்.நல்லது. தொடர்ந்து மற்றவர்களுக்கும் இந்தப் பகுதியை அறிமுகம் செய்து, வேதத்தை வாசிக்க ஊக்குவியுங்கள்.

### வேத பகுதி

## உபாகமம் 5 முதல் 9 வரை

1. கருத்தாய் போதித்து - அதிகாரம் -வசனம் குறிப்பிடுக .

2.நம் தேவன் பிதாக்களுடைய அக்கிரமத்தை எத்தனை தலைமுறை விசாரிக்கிறவராயிருக்கிறார் ?

3.வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் இருந்த ஏழு ஜாதிகளை கர்த்தர் எதினிமித்தம் அங்கிருந்து துரத்தினார் ?

4.பத்து கட்டளையில் இரண்டாம் கட்டளை என்ன?

5.கர்த்தர் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறார் - அதிகாரம் வசனம் குறிப்பிடுக .

6.ஏழு ஜாதிகளின் பெயர் என்ன?

7.மேற்சொன்ன ஐந்து அதிகாரங்களில் வணங்கா கழுத்துள்ள ஜனம் என்ற பதம் எத்தனை முறை வருகிறது ?

8.உபாகமம் 9 ம் அதிகாரம், 26 முதல் 29 வரையான வசனங்கள் எதை குறிப்பிடுகிறது ?
a.மன்றாட்டு.b.வாக்குத்தத்தம்.c.விண்ணப்பம் d.பரிந்து பேசுதல். e.உடன்படிக்கை.

9.<u>கன்றுக்குட்டி</u> - வெள்ளியால் செய்யப்பட்டதா? பொன்னால் செய்யப்பட்டதா?

10.அடிமைத்தன வீடு எது ?

### கடந்த மாதம் சரியான பதில் எழுதியவர்கள்

1. செல்வம் ஜெயராஜ் (பிலாய்).

2.சரஸ்வதி தேவராஜ் (எக்மோர்) .

3.ஜெனிபர் (திருமுல்லைவாயல்).

4.ரெஜினா பாண்டியன் (அம்பத்தூர்).

5.ரம்யா லிவிங்ஸ்டன் (போரூர்).

6.இவான்ஜலின் ஜெயபால் (காட்பாடி).

7.லீலா ஜெயபால் (காமராஜ் நகர்).

8.ஜெப பிரிஸில்லா (வெள்ளானூர்).

9.ஜெய ஜோதி (திருமுல்லைவாயல்).

10.எட்வினா (கோயில்பதாகை).

11.கீதா தினேஷ் (பொத்தூர்).

12.ஜாய் ஜோஷ்வா (சேலம்).

13.ஹெப்சி கிரி (காமராஜ் நகர்).

பரிசு பெற்றவர் : **ஜெனிபர்**
( திருமுல்லைவாயல் )

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 28 - 10 - 2023.**